179235

# சுப்ரமணியக் கடவுள் கீர்த்தனம்

Q2b:38:2112
N14
179235

723

உ

வேலுமயிலுந் துணை.

திருத்தணிகை ஸ்ரீசிவ

# சுப்ரமண்யக்கடவுள் கீர்த்தனம்.

திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு.



இவை

S. R. இராஜு முதலியாரால்

இயற்றியது.

பெ. ஆறுமுக முதலியாரால்

...ன்னை. முராஹரி அச்சுக்கூடத்திற்

...ரசுரிக்கப் பட்டது.

...] 1919 [அணா 2.

...ஜிஸ்டர் காபிரைட்

2 MAR 1920
MADRAS

O26:38:2112
N19
179235

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# நூதன புத்தகங்கள்.

ஜெயங்கொண்ட சோழபுரம், வா. கிருஷ்ணசாமிகோனார் இயற்றிய

ஸ்ரீமகாபாரதம். ஆதிபர்வம், சபாபர்வம் அடங்கிய முதற்பாகம்
திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 40-சயிட்டுள்ளது 0 4 0

ஸ்ரீமத் ராமாயணம் பாதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ்
காவடிச்சிந்து வர்னமெட்டு 40-சயிட்டுள்ள புஸ்தகம் 0 4 0

ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹரணம் திருப்புகழ்
காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0

இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0

நற்குலசேகரி என்னும் நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவ
டிச்சிந்து வர்னமெட்டு இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள்
முற்றிலும் அதிலுள்ளபாடல்களை உபயோகிக்குமாறு பல வர்ன
மெட்டுகளுடன் கூடியது முதற்பாகம் 0 2 0
ஷை நல்லதங்காள் சரித்திரம் இரண்டாம்பாகம் 0 2 0

அல்லி அர்ஜுனு திருப்புகழ் காவடிசசிந்த வர்னமெட்டு, இவை
டிராமா கமபெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்
களை உபயோகிக்குமாறு பல வானமெட்டுகளுடன் கூடியது
முதற்பாகம் 0 2 0
மேற்படி அல்லி அர்ஜுனு இரண்டாம்பாகம் 0 2 0

கோவிலன்சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு இவை
டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும இதிலுள்ள பாடல்
களை உபயோகிக்குமாறு பல வர்னமெட்டுகளுடன் கூடியது
முதற்பாகம் 0 2 0
மேற்படி இரண்டாம்பாகம் 0 2 0

## திருசிரபுரம், கோவிந்த தாஸ் அவர்களியற்றிய

ஸ்ரீராமாயண பக்திரஸக் கீர்த்தனங்கள் நூதன இந்துஸ்தான்,
பாரீஸ், தில்லானு, டோமரி அடங்கியது 0 5 0

கும்பகோணம் புஸ்தகஷாப்பு கே. வி கதிர்வேல்பிள்ளை இயற்றிய

தேசிங்குராஜன்கதை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0
நந்தனார் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
சாவித்திரி-சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-ம் பாகம் 0 2 0
மேற்படி சாவித்திரி-சத்தியவான் 2-ம் பாகம் 0 2 0
மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து 0 3 0
வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
காமதகன திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0
பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
இட்டிலிக்கும் உப்புமாவுக்கும் சண்டை 0 1 0
ராம நாம பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ன மெட்டு
இதிலுள்ள கீர்த்தனைகள் வெகு குதூகல முண்டாகும் 0 3 0
மாம்பழக்கும்மி. 0 1 0

உ

குகமயம்.

வேலு மயிலுந் துணை.

திருத்தணிகை

ஸ்ரீ சிவ

# சுப்ரமண்யக்கடவுள் கீர்த்தனம்.

## திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு.

இது

ஆரணிஜாகீர் காமக்கூர் தமிழ்ப்பண்டிதர்
M. சுந்தரமுதலியார் மாணவரும்
ஷை ஜாகீர் சம்புவராய நல்லூர் மணியம் முன்ஸீப்
தேவஸ்தான தர்மகர்த்தா இராமசாமி முதலியார்
குமாரருமாகிய,
S. R. இராஜு முதலியாரால்
இயற்றப்பெற்று
ஷை தமிழ்ப்பண்டித ரவர்களால்
பார்வையிடப்பெற்று
சம்புவராய நல்லூர்
S. M. விநாயகமுதலியார் விருப்பத்தின்படி,

பெ- ஆறுமுக முதலியாரால்,
சென்னை:
முரஹரி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

முதல் பதிப்பு.

ரிஜிஸ்டர் காபி ரைட்.

1919.

179235

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் திருத்தணிகை ஸ்ரீ சிவ சுப்ரமண்யக்கடவுள் கீர்த்தனம் காவடிச் சிந்து வர்ணமெட்டாக ஆரணி - ஜாகீர் காமக்கூர் தமிழ்ப் பண்டிதர் M. சுந்தரமுதலியார் மாணவரும் ஷை ஜாகீர் சம்புவராய நல்லூர் மணியம் முன்ஸீப் தேவஸ்தான தர்மகர்த்தா இராமசாமி முதலியார் குமாரருமாகிய S. R. இராஜு முதலியாரால் எழுதினதை பெரம்பூர் - ஆறுமுக முதலியாருக்கு, சகல சுதந்திரம் கொடுத்து விட்ட படியால் இதை என் அனுமதி யில்லாமல் இதரமானவர் எவ்விதத்தி லாகிலும் அச்சிட லாகாதென கனம் பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப் படிக்கு ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட் டிருக்கிறது.

இப்படிக்கு,

பெ - ஆறுமுக முதலியார்.

உ

குகமயம்.

ஸ்ரீ சண்முக சுந்தரவேலன் துணை.

# சாத்துகவிகள்.

---

## ஆரணி ஜாகீர், காமக்கூர், தமிழ்ப்பண்டிதர்,

### M. சுந்தரமுதலியா ரியற்றிய

வெண்பா.

சீர்த்தணிகை மாமுருக தேவன் றிருவடிமேற்
கீர்த்தனங்கள் பாடிக் கிடத்தினனால்—சோர்த்திவளச்
சம்புபுரி வாழ்ராம சாமியருள் ராஜுவெனும்
வம்புபெறு கல்வி செல்வன்.

---

## ஷை ஜாகீர், சம்புவராய நல்லூர், ஜோதிடம்,

## மா. முனிசாமி பிள்ளை யியற்றிய

விருத்தம்.

பார்புகழுந் திருத்தணிகை கிரிமீது வளர்முருகன்
பதத்தை நாடி
ஏர்மருவு சம்புநகர் வேளாள குலதிலக
னிராம சாமிக்
கோர்புதல்வ னாமிரா ஜுப்பெயரோன் வர்ணமெட்டி
லொருங்கு சேர்த்துப்
பேர்மருவு கீர்த்தனமா யெல்லோருங் களித்திடவே
பேசினானே.

---

## களம்பூர், போர்டு பாடசாலை, தலைமை உபாத்தியாயர்

## ச. பழநிவேற்பிள்ளை யியற்றிய

வெண்பா.

சித்திவளர் சீர்த்தணிகைச் செவ்வேளெங் கோமான்மேற்
பத்திவளர் கீர்த்தனங்கள் பாடியிட்டா—னத்திவளர்
நாவநகர் வாழிராஜு நன்னாமன் கங்கைகுலன்
நாவலர்கள் மெச்ச நயந்து.

---

# ஸ்ரீமத் ராமாயணத் திருப்புகழ்

## இமிடேஷன் பதிப்பு.

# புத்தக அறிக்கை.

திருச்சினாப்பள்ளி ஜில்லா, ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் அவர்களால் இயற்றிய இராமாயணத் திருப்புகழ்ச்சிந்து, காவடிச்சிந்து வர்ணமெட்டு என்னும் எமது அபூர்வ புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்குத் தெரியப் படுத்துவது யாதெனில்:—

நண்பர்கள் மேற்கூறிய இராமாயணத் திருப்புகழ் காவடிச் சிந்து என்னும் புத்தகத்தை ஷை கிருஷ்ணசாமிக் கோனார் அவர்களால் இயற்றப்பட்டு, பெரம்பூர்-ஆறுமுக முதலியாராகிய என்னால் சுமார் எட்டு பதிப்புகள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு, உலகமெங்கும் பிரசித்தியடைந்து, யாவராலும் புகழப்பெற்று வருவதும், இதற்கென கிடைக்கப் பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்களின் பெருமையும் யாவருக்கும் தெரிந்தவிஷயமே; ஆகையால் எமது வியாபாரத்தின் பொறாமையாலும், ஷை கோனார் அவர்களின் கவிலைய பங்கப்படுத்தவும் துர் எண்ணங்கொண்ட சிலர் புதிதாக ஸ்ரீமத் ராமாயண திருப்புகழ் என ஓர் "இமிடேஷன்" புத்தகத்தை அச்சிட்டு எமது வியாபாரத்தைக் கெடுக்க உத்தேசித்து அசுத்தமான பதிப்பாக அச்சிட்டு விற்று வருகிறார்கள். ஆகையால், ஷை இராமாயணத் திருப்புகழ் புத்தகத்தை வாங்க விருப்பமுள்ள நண்பர்கள் ஷை புத்தகத்தின் டைட்டல் பேஜியின்மேல் ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் இயற்றியதுதானாவென பார்த்து வாங்குவீரென நம்புகிறேன்.

இப்படிக்கு,

பெ—ஆறுமுக முதலியார்.

நெ. 4, பெருமாள்கோவில் தோட்டம் 2-வது சந்து,

சென்னை.

உ

குகமயம்.



## விநாயகர் துதி.

திருவுற்றிலகுகங்கை என்ற வர்னமெட்டு.

திருத்தணிகை நகரில் பெருமை யுடனிலங்கு
தீனதயாபர விசு வாசனை அன்னை
கானகக்குறவள்ளியின் நேசனை திகழ்
திகிரியைக்கர தலத்திலேந்திடும் மகிமைநாரண னாகியவொரு
திருமால்மருகேச சீலனை சிவ
பெருமானீன்றருளிய பாலனை

பிரணவப் பொருள்தன்னை உரைத்திடாமலே யன்று
பிரமைகொண்டுநின்ற வேதனை கடுஞ்
சிறையில்வைத்தமலர்ப்பாதனை மிகு
பிரபலன்சூர் கோவணங்கிய பெருமைசேர்பரி பூரணம்பெறு
பிரியநறுங்கடம் பாரனை நிதம்
பிரியனிராஜுபணி வீரனை

கஞ்சமலரை நிகர் செஞ்சரண கழலானை
கம்பீரமயிலேறும் வேலனை உயர்
உம்பர்களுக்கனு கூலனை பாட
கணபதியினிரு கருணைமிகுந்திடு மணிபதந்தனை தினம்மறவாமல்
கைதொழுதேத்தியாம்போற்றுவாம் தும்பிக்
கையன்றன்சீரதைச் சாற்றுவாம்.

சென்னை-600 005

உ

குகமயம்.

ஸ்ரீ சண்முகசுந்தர வேலன் துணை.



# ஸ்ரீ சிவசுப்ரமண்யக்கடவுள் துதிகள்.

தெள்ளு தமிழ்க்குதவு என்ற வர்னமெட்டு.

1. ஆறுமுக மானகுரு நாதா எனை
ஆதரித் தருள்புரிவாய் போதா மிகு
அந்தமுறு மிந்தணிந்த சுந்தர னருள்குமர
சீலா அனு கூலா
சூரர்களை அழித்தோனே யீசா சிவ
சுப்ரமணிய முரு கேசா வனந்
துள்ளுகின்ற புள்ளிமயில் கொள்ளுகின்ற வள்ளிமகி
ழங்கா மறை யங்கா

வேலவனே வேலவனே யென்று அன்பர்
வேண்டிடுந் திருத்தணிகை சென்று உன்னை
வேண்டினவ ரின்னலதை துண்டஞ்செய் திடுமற்புத
தேவே எந்தன் கோவே
அன்ப ரிருதயம் வாழும் வேலா மனத்
தன்ப னிராஜு துதிசெய் மேலா ஒலி
ஆழிசூழு மாவுலகைத் தாவியளந் தவன்மரு
கோனே பெரு மானே.

### மஞ்சுநிகர் குந்தள மின்னே என்ற வர்னமெட்டு.

2 மதியை நிகர் வதனியாள் வள்ளி
மனமகிழும் கனமுளோனே
மண்டலத்தோர் புகழும் புள்ளி எழில்
மாமயின் மிசை நேமமாய் எனும் பூமனே நறுந் தாமனே திரு
மாதுநாத னின் மருகோனே
மங்கை உமையாள் புங்க சுதனே
மனமுவந் தருள் முருகோனே

தஞ்சமென் றடைந்தேன் நேயனே
தற்பர தாயனே அப்பிர மேயனே
தந்திமுக னுக் கிளையோனே அன்று
தந்தை செவியினில் மந்திர மதை விந்தை யாயுரை கந்த நாதனே
தணிகை நகர் வாழுந் தேவனே
சண்முக நாதா கண்ணிய போதா
தயாள முள்ள மகானு பாவனே

சந்தத மும் உந்தன் றுணையே
சிந்தனை செய்யும் மைந்தன் றன்னிடர்
சிந்த வருவா யிவ்வேளையே உயர்
சரவ ணபவா கருணா கரகுகா அரன ருளிய குருபரா சிவ
சச்சிதா னந்த வுல்லா சனே
தாசனும் ராஜு நேசமாய் போற்றும்
சாமி யேசிங் காரயீ சனே.

### ஆறுமுகவடி வேலவனே என்ற வர்னமெட்டு.

3. தாலமெல் லாம்புகழ் வேலவனே வள்ளி
தாய் தழுவும் லோலா பொல்லா
தானவர் காலனே தீனத யாளனே தற்பரனே சீலா
ஆலமுண் டோன் கங்கை பாதிப் பிறைதனை
யணிப ரமன் சேயா உயர்
ஆறுமுக தேவே பேறருள் வாய்சிவ ஆசிரியத் தூயர்
சரவணனே சிவ சண்முக னேயிந்த
சமயம் நீ காத்தருளே கந்த
சாமியே இன்னமுந் தாமதஞ் செய்திட லாமோ குணத்தெருளே

நாரணன் மருகா நான்முக னாதியர்
நவில்கின்ற சர்வேசனே எந்தன்
நாதனே கமலப் பாதனே போதனே நற்றணிகை வாசனே

வானவர் கோனீன்ற தேவகுஞ் சரியாள்
மனமகிழும் நேசா கரி
வாரண மாமுக காரணன் சோதர மாதவனே தேசா

பாடும் ராஜுமனங் கூடிவாழ்ந் தருளும்
பரிபூரண ஜோதியே-எழில்
பாவலர்கள் தின மாவலாய் போற்றிடும் பக்த ரனுபூதியே.

---

## என்னடி நான் பெற்ற என்ற வர்ன மெட்டு.

4. ஆறுமா முகனே நேயா அருள் தூயா காங்கேயா
அன்னை ஆரணி யருளுஞ் சேயா முன்னம்
ஆயர்பாடியில் வெண்ணையை மாயம தாகவே யுண்ட
ஆரண முகுந்தன் மருகா எழில்
ஆரமணிந்தோனே முருகா

தேவரைக் காத்த விஸ்வேசா சர்வேசா பிரகாசா
பாவை தேவகுஞ்சரியின் நேசா திவ்ய
தீனதயாளா சண்முக ஞான குணாளா கடம்பணி
தேவே தணிகைவாழ் சீரா எந்தன்
கோவே பன்னிருகை தீரா

சுப்பிர மணியசீலா சூரர்காலா வடிவேலா நிதம்
சொல்லும் ராஜுபணி மேலா பரஞ்
சுடரே வள்ளி மகிழ்ந்திடும் அடல்மிகு சரவண பவனே
சுத்தனே காத்தருள் நாதா இன்னம்
அத்தனே யென்மீது வாதா.

---

## இசைந்த ஏறுங் கரியுரி என்ற வர்னமெட்டு.

5. கருணாகரனே தணிகையில் வாழுங் காங்கேயா
ககமீ தேறுங் கண்ணன் மருகா கவின்சேயா
பெருமாள் விடைமீ தேர்வோ னருளிய பெருமானே
பீடார் தெய்வ யானையை யென்றும் - பிரியானே

வருவாய் தருணம் தருவாய் நின்பதம் வடிவேலா
வானவர் குலமே வோங்கிட வருளும் மலர்க்காலா

மருவிய ராஜு மனமதி லுறையும் முருகோனே
வனக்குற வள்ளி கனக்குயஞ் சேரு மயிலோனே.

## ஆரே சையா படு என்ற வர்னமேட்டு.

6. வடிவேலா வனசமலர்க் காலா
வள்ளி நாயகி லோலா (வடி)

படியுள்ளோர் போற்றிடும் பிரகாசா பரமர்க்குரு நேசா
பத்தர்தம் மனவாசா
பதிகுணனே நிதியெனது கதியிதுவே ததியருளே (வடி)

அரியின் மருகோனே ஆதிசீலா அம்பிகையீன்ற பாலா
அண்டருக் கனுகூலா
அஞ்சலியா வஞ்சகனும் கஞ்சனைமுன் வெஞ்சிறைசெய் (வடி)

சூரனைக் கொன்ற வீரகாங் கேயா சுப்ரமண்ய தூயா
துதிராஜுவின் நேயா
துங்கவயில் புங்கவனே தங்கமயில் தங்கியவா. (வடி)

## பொன்னுலவு சென்னிகுள என்ற வர்னமேட்டு.

7. ஆறுமுக வேலவனே மாறுபடு மவுணர்தம்
ஆவிகொ ளனந்தவித லோலனே இந்த
பாவியான என்னையாளுஞ் சீலனே கொன்றை

ஆரமணி சிவ தேசிகா பரி பூரணா அருள் காரணா உயர்

ஆதியேவள்ளி மகிழும் மேலனே பரஞ்சோதியே
அண்டருக் கனு கூலனே

சண்முகா சரவணனே விண்ணவர் பணியுங்கோனே
சந்திர சடாதரன்றன் சேயனே பாச
பந்தமதைத் தீர்த்தருளும் நேயனே கந்த
சாமியே நன்னேமியே அந்தர் மாமியேபல நாமனே திருத்
தணிகை நகரில் வாழுந்தூயனே சிறு
தனயனிராஜூவின் சகாயனே.

எப்போதா னிரங்குமோ என்ற வர்னமேட்டு

8. சண்முகா தயைபுரி
சமய மிதுவேசரி (சண்)

விண்ணிலுள் ளவர்துதி
விமலா நீயேகதி
அண்ணலே கண்ணியா
ஆதிமூலன் மருகேசனே (சண்)

கந்தகா தனே சீலா
கௌரி யுமையின் பாலா
தந்தையே வந்தாளும்
தயாபரனே சிங்காரா (சண்)

மைந்த னிரா ஜூமன
வாசா மலர்ப்பாதா
தந்திமுகத் தெந்தைமகிழ்
தணிகைமாநகர் வேலோனே. (சண்)

முத்துக் குமாரய்யனே என்ற வர்னமேட்டு.

9. வித்தகாவள்ளி நேயனே
சித்தியருள் தூயனே (வித்)

கத்துவே லையுல    கத்திலே ங்கிக
சுத்தமேவு    லோ-திரு
பத்தர்சொல்லும்    வேலா    மூலா    (வித்)

கங்கையோடு வொளிர்    திங்கள் தன்னை புனை
சங்கரன் றன்    பாலா-உயர்
புங்கவனே    மேலா    லோலா    (வித்)

மைந்தன் ராஜூவின் றன்    சிந்தையி லுறையும்
பந்த நாசா    நேசா-அருள்
கிந்த நாதா    யீசா    தேசா.    (வித்)

---

## ஆண்டவா அகமாயை யொழி என்ற வர்னமெட்டு.

10 வேலனே வேணியில் கங்கை யணிந்தோன்    பாலனே
மூலனே    விண்ணவர் தம்    மேலனே
வேதன்    பணி    சீலனே
வள்ளிமகிழ்    (வே)

நேசனே நாடு மடியார்கள்    விசுவாசனே
ஈசனே    எழில்    பிர    காசனே
இகழ்    பவ    நாசனே
எந்தைவடி    (வே)

நாதனே நல்ல நளின மாமலர்ப்    பாதனே
போதனே    நின்மல    ப்ரக்    யாதனே
நவநீ    தனே
புகழ்ந்திடும்    (வே)

செய்யனே சேய னிராஜூ புகழ்    மெய்யனே
அய்யனே    அருள்    முரு    கையனே
ஆறுமுகத்    துய்யனே
காங்கேயா.    (வே)

---

## என்ன விதமாக யான் என்ற வர்னமெட்டு.

பல்லவி.

11. கருணை செய்குவாய் நாதா
கார்த்தி கேயனே நீதா (கரு)

அநுபல்லவி.

திருமால் மருகா சீலா திங்கள ணிந்தோன் பாலா
தீர சூரர்க்குக் காலா (கரு)

சரணங்கள்.

தேவர் பணிந்திடுந் தூயா தேவகுஞ் சரியின் நேயா
பாவலர்கள் பாடிபுகழ்
பங்கஜ மலர்ப் பாதா பரிபூரணனே போதா (கரு)

கந்தநாதா வடிவேலா கானமயிலேறுஞ் சீலா
பந்தபாசந் தன்னை நீக்கி பாரினில் மிக்க சீராய்
பாமரன் றன்னைக் காராய் (கரு)

வள்ளிம ணவாளா தீரா வடிவழகனே வீரா
வள்ளலே தணிகை வாசா மைந்த விராஜ நேசா
வாக்குலேயா சர்வேசா. (கரு)

---

## இன்னம் பராமுக மேனோ என்ற வர்னமெட்டு.

12. பால சுப்ரமண்ய சீலா இந்த
பாலனைக் காரும் வடி வேலா (பால)

கோல மயிலேறும் கோனே அநுகூலா
தாலம் புகழ்ந்திடும் தையல்வள்ளிலோலா (பால)

பந்தந் தீர்ப்பாய் வாசா பன்னிருகை யீசா
எந்தாய்க் குஞ்சரியின் நேசா உந்தன்
இணையடி தாமுரு கேசா (பால)

அந்திவண்ணன் சேயா ஆறுமுக தூயா
மைந்த விராஜ போற்றும் நேயா எழில்
மால்மருகோனே செவ்வாயா. (பால)

## சேந்தின் மாநக ரந்தனில் மேவிய என்ற வர்ணமெட்டு.

13. கந்த நாதனே அந்தரர் போற்றிடும்
கங்கை யணிந்தவன் சேயா எழில்
மங்கை வள்ளியாள் தன் நேயா உயர்

கதியுனைவிட பதியேவேறில்லை கதியீதருள்குண நிதியேசூரர்கள்

காலனே இந்த காசினி யோர் புகழ்
காரணனே கார்த்திகேயா பரி
பூரணனே வாகுலேயா

எந்தையே எந்தன் பந்தமதைத் தீரும்
எங்கும் நிறைந்தவா நாதா திவ்ய
தங்கமயி லேறும் போதா உந்தன்

ஏரலர்கள் தமை பாரதனில் மிக சீரழியச்செய்த தீரகுணமுள

ஏகனே தணிகா சல மாநகர்
என்றும்வளரும் பொற்பாதா
அன்னைகுஞ்சரி மகிழ்நீதா.

## இன்னம் வர்மம் என்ற வர்னமெட்டு.

14. ஆலமுண்டவன் பாலா அறுமுகசீலா
எங்கள் அறுமுக சீலா
தாலம் புகழ்ந்திடும் தற்பர வேலா (ஆல)

வாதுயென்மீது யேனோ வள்ளிமணாளா
எங்கள் வள்ளி மணாளா
மாது குஞ்சரியாள் மருவுங் குணாளா (ஆல)

கந்தா கருணாகர கார்த்தி கேயனே
எங்கள் கார்த்தி கேயனே
அந்தரர் போற்றிடு மாதி நேயனே (ஆல)

கன்னல் மாரனை யீன்ற கண்ணன் மருகா
எங்கள் கண்ணன் மருகா
அன்ப னிராஜு தன்னை ஆதரி முருகா. (ஆல)

### ஆயமுஜே கர என்ற வர்னமெட்டு.

15. ஆரமதைப் பூண்டவனே அருள்புரிவாய் கோனே
முன்னம் ஆலமதை யுண்டோனருளாறு முகா
இந்த தாரணியோர்போற்றிசெய்யும் வேலா
உந்தன் தந்தைக்குப தேசஞ்செய்த சாமிநாதா

### கஜல்.

காசலந் தன்னைக் காத்த கடவுளாங் கமலக் கண்ணன்
ஆராவணை கொள்ளு மாதிமூலனார் மருகா மேலா
பராபரப் பொருளே நித்தம் பத்தர்கள் போற்றி செய்யும்
நிராமயா கார்த்தி கேயா நித்திய குணாளா யீசா

வள்ளி மகிழ்ந் தீரனே கள்ளவிழ் கடம் பாரனே
விள்ளரியபுகழ்வீரனே புள்ளிமயில் கம்பீரனே

கஞ்சனை முன்னம் கடுஞ்சிறை வைத்தோய்

கந்தா எந் நாளுமே
வந்தெ ன்னை யாளுமே

மைந்தன் ராஜு சந்ததமும் வந்தனை செய் நேசா (ஆர)

---

### அள்ளி அள்ளி நீர் என்ற வர்னமெட்டு.

16. அமரருலகு காத்த ஆறுமுக வேலா
ஆதிமூ லன்ம ருகனே முருகனே
ஆதிமூ லன்ம ருகனே
அந்திவண்ணனருள் கந்தசுவாமியே
மைந்தனிராஜு பந்தமகற்றிடும் (அமர)

கானமயின்மீ தேறும் தீனதயாளனே
காத்த ருளுவா யீசனே நேசனே
காத்த ருளுவா யீசனே
கதிநீயெனவே பதியையுந்தனை
சரணமடைந்தேன் சரவணபவா. (அமர)

கடப்ப மாலையணி கம்பீர தீரனே
கடத்தை ஒழிப்பாய் மெய்யனே துய்யனே
கடத்தை ஒழிப்பாய் மெய்யனே

கங்கையையணிந்த சங்கரன்செவியில்
புங்கப்பிரணவந் துங்கமாயுரைத்த (அமர)

179235

## ராமா என்னை ரக்ஷி என்ற வர்னமெட்டு.

O26:3S:212 N4

17. கந்தா என்னை காத்தருள் ஈசனே
கந்தனே பந்தந் தீர்
கனமிகுஞ் சரி மனமகிழ் நேசனே (கந்)

சரவண பவகுக அரனருள் குமரனே
சண்முக கடம்பணி வேலனே
தானவர் காலனே கோனே சுத்தனே சித்தனே
சந்ததம் அன்பர்கள் வந்தனை செய்திடும் (கந்)

அயனது சிரமதில் குட்டிய நாதனே
அழகிய வள்ளி மணாளா
அம்புய மலர்நிகர் தாளா அத்தனே சுத்தனே
அனுதினம் ராஜு வணங்கிடும் போதனே. (கந்)

---

## மனமோகன மடமாமயிலே என்ற வர்னமெட்டு.

18. சிகிவா கனனே சிவகுரு பரனே
சுரர் கோனே என்
அக மகிழ்ந் தினி நான்
துதிப் பதற் கருள் வேலனே

இந்த மகிதலம் புகழாளா
எழில் வனச மலர்த் தாளா

உயர் அகிலப் பொருட்கரு முமையாள் அருளிய
ஆறுமுக அருள்புரி சரவண பவகுக

வேலவனே சீலவனே
மேலவனே மூலவனே திரு (ஜெ)

மாயோன் மருகோனே
மலர்கடம் பணிமுருகோனே தேவ

மகபதி யீன்றருள்
மடமிகு குஞ்சரி
அகமகிழ்ந் திடும்
கனமுள நேயனே
ஆசையொடு ராஜாங்கிதம்
பேசுமிர காசமிகு திரு (ஜெ)

---

பாரடி மயிலே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

19. ஆதரித் தருளே
உயர் ஆதியே சண்முக
ஜோதியே நீதியே (ஆத)

அநுபல்லவி.

சீதாதாமோ தரன் மருகனே
சிங்காரவள்ளி மகிழ் முருகனே (ஆதரி)

சரணங்கள்.

சண்முகனே திகழ்வடி வேலா
சரவணபவ தேவ சீலா
விண்ணிலுள்ளவ ரனு கூலா
விமலாமேலா உமையவள் பாலா

வள்ளி விதமகி ழீசனே
மைந்த னிராஜாங்கி னேசனே
தெள்ளுங் குணவிசு வாசனே
திருமிகு தணிகையில் வாசனே. (ஆதரி)

# நொண்டிச்சிந்து.

20. 1. வேலனே வரமருள்வாய்-புனிதனே
விமலா தணிகை நகர் வாழ்வோனே
சீலனே வள்ளி நேயா-அற்புத
சிங்கார மயிலேறுந் தீனத யாளா

2. கந்தனே கடம் பாரா-கர்த்தனே
கைலை வாசனருள் கவின் சேயா
அந்தரத் தோர் துதிசெய்-ஆதியே
ஆறுமா முகனே அன்பர் நேயா

3 பிரணவப் பொரு ளறியா-நான்முகப்
பிரமன் றன்னை முன்னம் சிறைவைத்தவா
முரஹரி மால் மருகா-முதல்வா
முருகா பன்னிருகை வாகு லேயா

4. நீரதா ரகன் முதலோர்-அழியச்
செய் தவனே சரவண பவனே
ஆரணம் புகழ் தேவே-குருபர
அய்யனே மெய்யனே சிவ குருவே

5 அத்தனே குஞ்ச ரியாள்-அநுதினம்
ஆவலுட னணையும் பிரகா சா
சுத்த னேகாங் கேயா-சீலா
சுக மருள் புரிகுவாய் குருநாதா

6 தனயன் ராஜு பணி-விநோதனே
தாரணி யோர் புகழ் தற்பரனே
கனமிகு மனு கூலா-வுல்லாசா
கம்பீர தீரனே குமர குகா.

தந்தின தன தனனு

வாவா குக முருகா என்ற வர்னமெட்டு.

21\. சண்முகா குகனே உயர்
சங்கரனருள் சீலனே
துங்கமயில் வடி வேலனே

அண்டர்கள் போற்றிடும்
விண்டுவின் மருகா
அமலனே தணிகையில் வாழ்ந்திடும்
விமலனே அருளது புரிகுவாய் (சண்)

காங்கேயா தூயனே மிகு
கருணாகர சரவணபவ
பரிபூரண சிவ குருபர
ஆங்கயன் சிரசை
பூங்கையால் குட்டிய
ஆதரித்திலங்கிடு மறைமலர்ப்
பாதனே போதனே நீதனே (சண்)

மைந்தனை ராஜ— நிதம்
மனதினிலெண்ணிடு மீசனே
கனமுளவள்ளியின் நேசனே
கந்தா எந்தனிட
பந்தமதைத் தீராய்
கரிமுகன்சோதர நாதனே
பரம்பொருளே பிரக் யாதனே (சண்)

சுனு ப்யாரி மோகனு என்ற வர்னமெட்டு.

22\. அருள்புரிவாய் நாதனே
அமலபொற் பாதனே (அரு)

திருத்தணிகை நகரில்மேவுஞ்
தீனதயாளா சீலனே
திருமகள்தன் கேள்வன்மகிழும்
திவ்வியமருகா வேலனே (அரு)

ஆலமுண்டோனீன்ற பாலா
ஆறுமுக தூயனே
ஞாலம்புகழும் ஞானவானே
நாடுமெடியார் நேயனே (அரு)

கந்தவேளே தந்தைகுருவே
கவினுறுங் குமரேசனே
மைந்தன்ராஜு மனவாசா
மருளைத்தீர்ப்பாய் நேசனே. (அரு)

---

## ததியருள்வாய் தயை என்ற வர்னமெட்டு.

23. ஆதியே வாராய் நீதியே நேராய்
அல்லலைத் தீராய்
பாதிமதியணிந்தோன் பாலா பரமசீலனே (ஆதி)

அசுரர்தம்மை யழித்தமூலா
ஆறுமுகனே பசுபதிக்கருளும் சேயா
பார்த்தருள் லோலா வடிவேலா
அல்லலைத் தீராய் (ஆதி)

வள்ளிமகிழ்ந் தணையுந் தேவே
வாரிஜதாவா புள்ளிமயிலேறும் நாதா
போதனே நீதா ப்ரக்யாதா
அல்லலைத் தீராய் (ஆதி)

சந்ததமும் தாசன்ராஜு
சாற்றுங் தேவனே கந்தவேளே
தணிகைவாழும் கர்த்தனே நேசா சர்வேசா
அல்லலைத் தீராய். (ஆதி)

---

## கபுனாலே காலேஷா என்ற வர்னமெட்டு.

24. வடிவேலாசீலா வள்ளிநாயகிமனமகிழ்லோலனே
மருளைநீக்குவாய் சேயே இன்னருளைத்
தாக்குவாய் தூயா வுன்
கருணை நோக்குவாய் (வடி)

வாணிகேள்வன் தன்னை
முன்னம் நாணிடச்செய் நாதனே
வாணியில்லா தென்னைக்காரும்
வேணியுடைய போதனே (வடி)

பாற்கடலில் பள்ளிகொள்ளும்
மாற்குபிரிய மருகனே
சேற்கண்ணுமையாள் சேயனை
ஆற்றலுடைய முருகனே (வடி)

தந்தைசெவியில் பிரணவமாம்
மந்திரத்தை நவின்றவா
மைந்தன்ராஜு போற்றிசெய்யும்
கந்தனேஎன் முன்னம்வா. (வடி)

தெள்ளு தமிழ்க்குதவு என்ற வர்னமெட்டு.

25\. ஏழையேன்மீதி லீன்னம்வர்மா மன
மிரங்காதிருப்பதுவுந் தர்மமா உயர்
இமயாசலத் துதித்த
வுமையாள் மகிழ்ந்தளித்த
பாலா வடி வேலா

கானகக்குறவள்ளியின் நேயா சிவ
காங்கேயகடம்பணிந்த தூயா அவுணர்
காலனே அண்டர்கள் புகழ்
மேலனே தணிகைநகர்
வாசா ஜெக தீசா

கமலக்கண்ணன்பிரிய மருகா தேவ
கார்த்திகேயனேகுக முருகா ஒளிர்
கஞ்சமலர் வேதன்றன்னை
வெஞ்சிறையி லன்றுவைத்த
தீரா கம் பீரா

தந்தைக்குபதேசஞ்செய்த சீலா நிதம்
தாசன்ராஜு துதிசெய்யும் மேலா எழில்
தங்கமயில் தங்கியவா
புங்கவனே ஆறுமுக
தேவா மகானு பாவா.

---

எத்ததிஸ மாதியோ என்ற வர்னமெட்டு.

பல்லவி.

26 கந்தாதா கார்த்திகேயா
கௌரிசேயா கமலப்பாதனே (கந்த)

அநுபல்லவி.

அந்தரர்கள் பரவும்போதா
அவுணர்கள்குல காலா திவ்ய
ஆறுமுகனே வேலா
அமல சீலா (கந்த)

சரணங்கள்.

சரவணபவ குகா
தையலாள்வள்ளியின் மோகா
வரமருள் சண்முகனே
வாசவன் மருகேசா எந்தன்
வல்வினையொழி நேசா அருட்பிரகாசா (கந்த)

பத்தர்க்கருள் பரம்பொருளே
பவநாச குணத்தெருளே
வித்தகனே தேவதேவே
விண்ணவர்க்கனு கூலா உயர்
மேவிய மயில்மேலா
எவைக்கு மூலா (கந்த)

பந்தபாசவினைத் தீராய்
பாமரன்றன்னைக் காராய்

மைந்தன்ராஜ — போற்றுந்தீரா
மைக்கரி — மகள்நேயா திகழ்
வடிவழக — னேதூயா
மறைசொல் — வாயா. (கந்த)

## பாதி மதிநதி போதுமணி என்ற வர்னமேட்டு.

27 சிதமதி — புனல்
சூடும்வே — ணியன்
சிலவ — னருளு
முருகோனே
சீர்கொள் — மயில்தனை
யூர்தியெனக் — கொளும்
சேயகதிர் — பெறு
வடிவேலா
தாதுவிரி — கொன்றை
ஆரமணி — சிவ
சங்கர — பரமன்
குரவோனே
தானவர் — குல
மீனமுற — ப்புரி
சாமிமகிழ் — வள்ளி
மணவாளா
வேதன்மு — தல்சுரார்
மாதவர்கள் — புகழ்
மேவுந்தணி — கையில்
வளர்வோனே
விமலவனே — உயர்
காங்கேயனே — எந்தன்
வினையை — தீர்த்தருள்
புரிவாயே
காதலுடன் — தேவ
குஞ்சரி — மகிழ்
கந்தநா — தனே
மலர்ப்பாதா

கருதரிய சம்பு
புரியிராஜு சொல்
கரிமுகற் கிளைய
பெருமானே.

வடிவேலா சிவபாலனே என்ற வர்னமெட்டு.

28 அநுகூலா வடிவேலனே
அருள் புரிவாய்

அநுதினம் யானே
அடிபணிந் தேனே
அரிமருகா வேல்முருகனே
அமலவானே (அநு)

சிவனருள் சேயா
சித்தனே நேயா
சிங்கார கம்பீரனே
சிற்பானே (அநு)

சூரர்கள் காலா
துய்யனே லோலா
சுகந்தாதா குருநாதனே
சுந்தரனே (அநு)

ராஜுவின் நேசா
ரஞ்சித தேசா
ரக்ஷிப்பாய் பக்ஷமதாய்
தக்ஷணமே. (அநு)

திருத்தணிகை

ஸ்ரீ சிவசுப்ரமண்யர் கீர்த்தனை,

முதற்பாகம்-முற்றிற்று.

179235

# ஸ்ரீமத் ராமாயணத் திருப்புகழ்

## இமிடேஷன் பதிப்பு.

# புத்தக அறிக்கை.

திருச்சினாப்பள்ளி ஜில்லா, ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் அவர்களால் இயற்றிய இராமாயணத் திருப்புகழ்ச்சிந்து, காவடிச்சிந்து வர்ணமெட்டு என்னும் ஏமது அபூர்வ புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்குத் தெரியப் படுத்துவது யாதெனில்:—

நண்பர்காள் மேற்கூறிய இராமாயணத் திருப்புகழ் காவடிச் சிந்து என்னும் புத்தகத்தை ஷை கிருஷ்ணசாமிக் கோனார் அவர்களால் இயற்றப்பட்டு, பெரம்பூர்-ஆறுமுக முதலியாராகிய என்னால் சுமார் எட்டு பதிப்புகள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு, உலகமெங்கும் பிரசித்தியடைந்து, யாவராலும் புகழப்பெற்று வருவதும், இதற்கென கிடைக்கப் பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்களின் பெருமையும் யாவருக்கும் தெரிந்தவிஷயமே; ஆகையால் எமது வியாபாரத்தின் பொறாமையாலும், ஷை கோனார் அவர்களின் கவியை பங்கப்படுத்தவும் துர் எண்ணங்கொண்ட சிலர் புதிதாக ஸ்ரீமத் ராமாயண திருப்புகழ் என ஓர் "இமிடேஷன்" புத்தகத்தை அச்சிட்டு எமது வியாபாரத்தைக் கெடுக்க உத்தேசித்து அசுத்தமான பதிப்பாக அச்சிட்டு விற்று வருகிறார்கள். ஆகையால், ஷை இராமாயணத் திருப்புகழ் புத்தகத்தை வாங்க விருப்பமுள்ள நண்பர்கள் ஷை புத்தகத்தின் டைட்டல் பேஜியின்மேல் ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமி கோனார் இயற்றியதுதானாவென பார்த்து வாங்குவீரென நம்புகிறேன்.

இப்படிக்கு,

**பெ-ஆறுமுக முதலியார்.**

நெ. 4, பெருமாள்கோவில் தோட்டம் 2-வது சந்து,

சென்னை.

### கும்பகோணம் - இராமச்சந்திரன் இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| காப்பிக்கும் பழையதுக்கும் சண்டை தேத்தண்ணீர் மத்தியஸ்தம் | 0 | 1 | 0 |
| பாலியப்பெண்கள் தலையணை மந்திரம் இரண்டுபாகம் அடங்கியது | 0 | 1 | 0 |
| பூஜா ராமாயணம் அணா 1 தெலுங்கு அணா 1 கிரந்தம் அணா | 0 | 1 | 0 |
| திரியோதனன் மோகம் நாவல்ஸ் | 0 | 4 | 0 |

### சுவாமிமலை S பொன்னம்பலம்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| திரு ஏரக மென்னும் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| இராமாயணம் சுந்தரகாண்டம் மாருதி விஜயமென்னும் இலங்காதகனம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 2 | 0 |

### சுவாமிமலை கு ரு முத்தையாபிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| பொய்சொல்லா புனிதனெனும் சத்யஅரிச்சந்திர திருப்பு-கா-சிந்து | 0 | 3 | 0 |

### மதுரை வித்வான் கலியாணசுந்தரம்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| மன்மதராஜன் சரித்திர லாவணி எரிந்த கக்ஷி 1-க்கு | 0 | 3 | 0 |
| பஞ்சரத்தின திருப்புகழ் மூலமும் உரை | 0 | 3 | 0 |
| எமனை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமாரன் சரித்திரம் என்னும் சித்திரா புத்திரன் கதை | 0 | 6 | 0 |
| ஸ்ரீமத் பரந்தாமன்பேரில் இந்துஸ்தான் வர்னமெட்டு பஜனை ஜாவளிகள் முதல்பாகம் 1-க்கு விலை அணா | 0 | 2 | 0 |
| தாடகை சம்மாரம் டிராமா 1-ம்பாகம் | 0 | 2 | 0 |
| சீதா கலியாணம் பரசுராம பங்கம் டிராமா 2-ம் பாகம் | 0 | 2 | 0 |
| வழிநடை உப்புமாவு பாட்டு | 0 | 1 | 0 |
| சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் ஏசல் | 0 | 2 | 0 |
| சம்பந்திக்கு சமையல்செய்யும் அப்பளப்பாட்டு | 0 | 1 | 0 |
| பல ஸ்தலங்களின்பேரில் பாடிய சிவப்புகழ் | 0 | 6 | 0 |
| குசேலர் சரித்திரம் திருப்புகழ் காவடிசசிந்து வர்னமெட்டு | 0 | 3 | 0 |
| ஞான சவுந்தரி திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 3 | 0 |
| சரசாங்கி ஜவளி முதற்பாகம் | 0 | 2 | 0 |
| சூடிகொடுத்த நாச்சியார் என்னும் கோதை கல்யாணம், ஆண்டாள் பரிணயக் கும்மி | 0 | 3 | 0 |
| சிறுத்தொண்ட நாயனார் திவ்ய சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு அடங்கியது | 0 | 2 | 0 |
| பாரிஜாத நாடக கும்மியும், ஸ்ரீரங்கநாதன் சந்நதியில் திருட்டுப் போன கும்மியும் | 0 | 2 | 0 |
| ஆர். நடராஜ ஆசாரி. கே. கே. தங்கவேலுபிள்ளை இவர்கள் பாடி வரும் சுதேச கள்ளன் பாட்டு | 0 | 2 | 0 |
| நாடகங்களில் விகடம் சில்லரை வேஷங்களில் சிலது எல்லாரும் சொல்லும் நல்ல சில்லரை பாட்டுகளும், விதூஷக ஆக்டும் உண்டு. | 0 | 4 | 0 |
| இவற்றில் பார்வதி இந்துஸ்தான் பதங்களும் அடங்கிய ஸ்ரீமகா விஷ்ணு பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 3 | 0 |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமகா பாகவதத்தில் துலாபார நாடக கும்மியும் ஸ்ரீரங்க நாச்சியார் வசந்த உற்சவ கும்மியும் | 0 | 2 | 0 |
| சக்குபாய் சரித்திரம் டிராமா | 0 | 8 | 0 |
| குசேல சரித்திரம் டிராமா | 0 | 8 | 0 |
| பாகவத திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |
| மாசிலாமணி உபாத்தியாயர் இயற்றிய சிறுத்தொண்டர் நாடகம் | 0 | 8 | 0 |
| விரகாலூர் - சுப்பையபிள்ளை அவர்களால்இயற்றிய இந்துஸ்தான் பார்வதி சதாரம் திருப்புகழ காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 4 | 0 |
| மகா மாகவிமை தங்கிய கீர்த்தி சிங்கமென்னும் கண்டிராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 4 | 0 |
| சக்குபாய் சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து வர்ண மெட்டு | 0 | 3 | 0 |
| ஸ்ரீ கண்ணன் யமுனையில் பின்னமரத்தில் நடத்திய கோபிகா வஸ்திராபரணம் கொம்மியும் | 0 | 3 | 0 |
| அதி பராக்கிரம சாலியாகிய மதுரைவீரன் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 2 | 0 |
| திருத்தணிகை சுப்பிரமணியர் கீர்த்தனை திருப்புகழ் வர்னமெட்டு | 0 | 2 | 0 |
| புதிய கலியாண வாழ்த்து எசல் ஓடம் லாலி ஊஞ்சல் அடங்கியது | 0 | 2 | 0 |
| சீட்டி சேலைக்கும் நாட்டு சேலைக்கும் சண்டை | 0 | 1 | 0 |
| சுப்பிரமணியர் கொத்து என்னும் அட்சரமாலையும், சத்துரு சங்காரமாலையும், சத்துருசங்கார திருப்புகழும். விநாயகர், சுப்பிரமணியர், சிவம், சிவகாமசுந்தரி, விஷ்ணு இம்மூர்த்திகளினர்சனைக்குரிய அஷ்டோத்திரமும், முருகேசர் பதிகமும் அடங்கியிருக்கிறது. | 0 | 3 | 0 |
| நீலிக் கதை | 0 | 4 | 0 |
| பண்டரி கீர்த்தனை | 0 | 4 | 0 |
| ஆறுபாவைத ஒக்கபிலேரி | 0 | 4 | 0 |
| கூலிக்குத் தாலிகட்டின கதை | 0 | 4 | 0 |
| ஏகாதசி மகாத்மியம் என்கிற உருக்மாங்கத சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 | 4 | 0 |
| சீகாளத்திபுராணம்—வசனம், காளத்தி க்ஷேத்திரத்தில் பக்தி முக்தியடைந்தவரின் சரித்திரங்களின் ஐதீக படங்களுடன் உண்டு | 0 | 6 | 0 |

இன்னும் தங்களுக்கு தேவையாய் இருக்கும் புஸ்தகங்களை விபரமாய் எழுதினல் உடனே அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பெ - ஆறுமுக முதலியார்,

நெ. 4, பெருமாள் கோவில் தோட்டம் 2-வது சந்து,

சென்னை.

9B
13.37